
**திராவிடத்தால் வாழ்கிறோம்**

**894**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**19**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# வக்ஃபு சட்டத் திருத்தம்: எதிர்ப்பில் அதிர்ந்த நாடாளுமன்றம்!




தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகளின் கடும் எதிர்ப்பால், வக்ஃபு வாரிய திருத்த மசோதாவை, உடனடியாக நிறைவேற்ற இயலாத நெருக்கடிக்கு உள்ளான பாரதிய ஜனதா அரசு, மசோதாவை கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பியது. பா.ஜ.க. எம்.பி. ஜெகதாம்பிகா பால் தலைமையிலான இந்தக் கூட்டுக்குழுவில், மக்களவையில் இருந்து 21 பேர், மாநிலங்களவையில் இருந்து 10 பேர் இடம்பெற்றனர். அதில் தி.மு.க. சார்பாக, மக்களவையில் இருந்து கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்களும், மாநிலங்களவையில் இருந்து கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லாவும் இடம்பெற்றனர்.

பெயரளவில் குழுவில் இடம்பெற்றார்கள் என்று இல்லாமல், கூட்டுக்குழுவில் அவர்கள் காட்டிய முனைப்பும், அதில் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காட்டிய அக்கறையும் சிறுபான்மையினருக்காக கழகம் எந்த எல்லைக்கும் சென்று, துணை நிற்கும் என்பதைக் காட்டியது. கூட்டுக்குழு ஒவ்வொரு மாநிலமாகச் சென்று, ஆய்வுகளை நடத்திக் கொண்டிருந்தது. குஜராத் மாநிலத்திற்கு இக்குழு செல்ல வேண்டிய சமயத்தில், டெல்லியில் பிரதமர் மோடியைச் சந்திக்கச் சென்றார் நமது முதலமைச்சர். அதையொட்டி, அனைத்து எம்.பி.க்களும் டெல்லியில் இருக்க வேண்டுமென்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரும், பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள் அறிவுறுத்தினார்.

அதையடுத்து உடனடியாக, துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் கழகப் பொருளாளரைத் தொடர்புகொண்டு, “நான் நாடாளுமன்ற நிலைக்குழு கூட்டத்திற்காக குஜராத்திற்குச் செல்ல வேண்டுமே, தலைவரிடம் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள்” என்று கூறியிருக்கிறார். சொன்ன 5-வது நிமிடத்தில் கழகத் தலைவரே, துணைப் பொதுச்செயலாளர் அவர்களைத் தொடர்பு கொண்டு, “தலைநகருக்கு வரும் என்னை அங்கிருந்து வரவேற்பதைவிட, நாட்டில் உள்ள 15% இஸ்லாமியர்களின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் சட்டத்தை எதிர்ப்பதுதான் முக்கியம், நீங்கள் குஜராத் செல்லுங்கள்” என்று கட்டளையிட்டார் என ஆ.ராசா அவர்கள், அந்த நாட்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## வக்ஃபு சட்டத் திருத்தத்தின் உள்நோக்கம்

தலைவர் இட்ட கட்டளையை ஏற்று, ஆ.ராசா அவர்களும் நிலைக்குழுக் கூட்டத்திற்காக குஜராத்திற்குச் சென்றார். அங்கே என்ன கூத்துகள் எல்லாம் நடந்தன என்பதை, 11-04-2025 அன்று ராணிப்பேட்டையில், வக்ஃபு வாரிய சட்டத் திருத்தத்தைக் கண்டித்து, நடைபெற்ற கூட்டத்தில் ஆ.ராசா அவர்கள் பேசும்போது கூறினார்.

நிலைக்குழுவில் அனைத்துக்கட்சிப் பிரமுகர்கள் முன்பு, வக்ஃபு வாரிய திருத்த மசோதாவிற்கு நியாயம் சேர்க்கும் வகையில், மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில் கோடிக்கணக்கில் கட்டணம் பேசி மூத்த வழக்கறிஞர்களை அழைத்து வந்தனர்.

அப்படி அழைத்து வரப்பட்ட வழக்கறிஞர் ஒருவர், “ஒரு கைக்குட்டையை எடுத்து, வக்ஃபு சட்டத்தின் பிரிவு 40-இன் அடிப்படையில் கீழே போட்டு, இது வக்ஃபு சொத்து என்று சொன்னால், அது வக்ஃபு சொத்தாகிவிடும். அவ்வளவு மோசமான சட்டம் அது” என்று கூறியுள்ளார்.

வக்ஃபு சட்டத்தின் பிரிவு 40-இல், வக்ஃபு வாரியத்திற்கு என்று தனியே சர்வே கமிஷனர் இருக்கிறார். ஒரு வக்ஃபு சொத்தை, இது வக்ஃபு சொத்து என்று கண்டறிவதற்கு அவர் சிவில் நீதிமன்றப் பத்திரங்களை ஆய்வு செய்ய வேண்டும், சாட்சியங்களைச் சேர்க்க வேண்டும் என அனைத்துப் பணிகளையும் அவர் மேற்கொள்ள வேண்டும். அவர் முடிவு செய்துவிட்டால், அந்த விவகாரம் தீர்ப்பாயத்திற்குச் செல்லும், அங்கு இறுதி முடிவு எடுக்கப்படும். சட்டத்தில் பிழை இருந்தால், வேண்டுமானால் நீதி மன்றத்திற்குச் செல்லலாம். ஆனால், இதை இவ்வளவு மோசமாகக் கூறிய அந்த வழக்கறிஞரைப் பார்த்து, “பிரிவு 40-இன் கீழ் வக்ஃபு வாரியத்தின் நிர்வாகிகள், வக்ஃபுக்குச் சொந்தமான சொத்து என்று சொல்வதற்கு எந்தப் பிரிவைக் கையாள்வார்?’ என்று எளிமையான கேள்வியை எழுப்பினார் ஆ.ராசா அவர்கள்.

ஆனால், பதில் தெரியாமல் முழித்த அந்த வழக்கறிஞர், தவறான சில பதில்களைக் கூறினார். அதன்பிறகு, அது என்ன பிரிவு என்று ஆ.ராசா அவர்கள் படித்துக் காட்டிய பிறகு, அந்த நபர் அமைதியானார். திருத்தத்தைப் படித்துக் காண்பித்த பிறகு, ‘சாரி, கொடுத்த பணத்திற்கு பணியாற்றினேன்” என்று கூறிவிட்டு, எழுந்து கிளம்பிவிட்டாராம்.

1971-ஆம் ஆண்டு பிரதமர் இந்திரா காந்தி ஒரு குழு அமைத்தார். நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட அந்தக் குழு இந்தியா முழுக்க பயணித்தது. இஸ்லாமியர்களுக்கு இன்னும் என்ன உரிமைகள் தேவை?, சுதந்திரத்திற்குப் பிறகு இஸ்லாமியர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கருத்து கேட்டது. அதில் ஒரு கூறுதான் வக்ஃபு சொத்துக்கள் பாதுகாப்பாக இருக்கிறதா என்பது. வக்ஃபு சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்ற விளக்கத்துடன், இதுகுறித்த வெள்ளை அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வெள்ளை அறிக்கை, கால் நூற்றாண்டு காலம் கிடப்பில் போடப்பட்டு, 1995-இல் நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் வக்ஃபு வாரிய சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அதுதான் பிரிவு 40. அதன்படி, வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமான சுமார் 65 ஆயிரம் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், அதனைக் கூட அறியாமல், வக்ஃபு வாரியத்திற்கு எதிராக வீசப்பட்ட அந்த வலைகளை, சம்பவ இடத்திலேயே அறுத்தெறிந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள்.

## அம்பலப்படுத்திய துணைப் பொதுச் செயலாளர்

மேலும் வக்ஃபு வாரிய திருத்த மசோதாவை. நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திப் பேசிய ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜூ, திருச்சி மாவட்டத்தில் உள்ள திருச்செந்துறை ஊர் முழுவதும் வக்ஃபு சொத்து இல்லை, ஆனால், வக்ஃபுவுக்கு சொந்தமானது என அறிவிக்கப்பட்டதாகக் கூறினார். அது தொடர்பான ஆவணங்களையும் திரட்டி கூட்டுக்குழுவின் முன்பாக வைத்தார் ஆ.ராசா. நிலைக்குழு சென்னைக்கு வந்தபோது, திருச்சி மாவட்ட ஆட்சியர், வருவாய் செயலாளர், வக்ஃபு வாரிய தலைவருக்கு அழைப்பு விடுத்து, ஆவணங்களைப் பரிசோதித்துப் பார்த்தனர்.

முந்தைய காலத்தில் நவாப் ஒருவரால் 800 ஏக்கர் நிலம் வக்ஃபுவுக்குச் சொந்தமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1951-ஆம் ஆண்டே இந்த சொத்துக்கள் யாவும் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. அப்போது இருந்த மாவட்ட ஆட்சியரும், இதனை ஆவணத்தில் கையால் எழுதியுள்ளார். இப்போது பலரும் குடியேறி விட்டனர், கிராமமே உருவாகிவிட்டது. அது வக்ஃபு சொத்துதான் என்பதை மறைத்துவிட்டு, நாடாளுமன்றத்தில் பதிவு செய்த தவறான தகவலையும், நிலைக்குழுவில் சுட்டுப்பொசுக்கினார் ஆ.ராசா.



இப்படி, நிலைக்குழுவில் பா.ஜ.க.-வின் சூழ்ச்சிகளை, தி.மு.கழகம் அம்பலப்படுத்திய போதும், நிலைக்குழுவின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் முடிவுகளுக்கு மாறாக, ஓர் அறிக்கையைத் தயாரித்தனர். கூட்டுக் குழுவின் பாரபட்சங்களை, தி.மு.கழக உறுப்பினர்கள் கடுமையாகக் கண்டித்தனர். எனினும், ஒன்றிய அமைச்சரவை, கூட்டுக் குழுவின் அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது. எந்நேரமும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம் என்ற சூழலில், போருக்குச் செல்லும் படை வீரர்களைப் போல தயாரானது திராவிட முன்னேற்றக் கழகம்.

> **“எந்நேரமும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம் என்ற சூழலில், போருக்குச் செல்லும் படை வீரர்களைப் போல தயாரானது திராவிட முன்னேற்றக் கழகம்.”**

...நீளும்

## பீகார் தேர்தல்: குழப்பங்களும் சூழ்ச்சிகளும்...

பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்கு தயாராகிவரும் நிலையில், அம்மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு பெரும் குழப்பத்தையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 24-ஆம் தேதி அம்மாநில தேர்தல் ஆணையம் ‘சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல்’ (Special intensive revision) திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் அறிவிப்பினை வெளியிட்டது. அதில், 2003-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் இல்லாதவர்கள் தங்களது இந்திய குடியுரிமை மற்றும் இருப்பிடத்தை நிரூபிக்க வேண்டும் என அறிவித்துள்ளது.

1987-க்கு முன் பிறந்தவர்களிலிருந்து, 2004-ஆம் ஆண்டு வரை பிறந்தவர்கள் என வயது வரையறைகளுடன் இருப்பிடச் சான்று தாய், தந்தை அடையாளச் சான்று, குடியுரிமைச் சான்று உள்ளிட்ட 11 ஆவணங்கள் வாக்காளர் பதிவுக்கு அளிக்கவேண்டும் என அறிவித்துள்ளது. இந்தச் சான்றிதழ்களை அளிக்கத் தவறினால், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்படும் என்றும் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்படும் என்றும் அறிவித்திருப்பதுதான் சர்ச்சைகளை உருவாக்கி இருக்கிறது. குறிப்பாக, ஆதார், ஏற்கெனவே எடுக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை ஆகிய அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்று அம்மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 11 ஆவணங்களில் கிட்டத்தட்ட 6 ஆவணங்கள் அங்கு பயன்பாட்டில் இல்லை என்று கூறப்படுகிறது. பாஸ்போர்ட், அரசுப்பணி அடையாள அட்டை ஆகியவற்றைக் கணக்கிட்டால், மீதமுள்ள சாதிச்சான்று உள்ளிட்ட 3 ஆவணங்கள் அனைத்து மக்களிடமும் இருக்கும் சாத்தியம் இல்லாத நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முடிவு செய்வார்கள் என்றும் ஆணையம் அறிவித்துள்ளது. இதன் மூலம் பா.ஜ.க.-வுக்குப் பாதகமான தொகுதிகளில் வாக்காளர்களை நீக்குவதற்கு வழி ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. வழக்கு உச்சநீதிமன்றத்துக்குச் சென்றுள்ளது. குழப்பங்களாலும் சூழ்ச்சிகளாலும் மட்டுமே வெற்றிபெறும் அரசியல் கட்சியாக பா.ஜ.க. மீண்டும் அம்பலமாகி இருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



மு.க.ஜீவா



### தமிழோடு நடந்த உணர்வு!

01.09.1995 அன்று, நாகப்பட்டினம் நகர்மன்ற 36-வது வார்டு உறுப்பினர் ஞானமணி - அமுதா இணையருக்கு இனமானப் பேராசிரியர் தலைமையில் திருமணம் நடந்தது. மணவிழாவுக்கு வருகை தந்த பேராசிரியர் அவர்களை, அரங்கத்தின் வாசலிலிருந்து வரவேற்று, மணமேடைக்கு அழைத்து வந்தபோது எடுத்த படம். பின்னால், அன்றைய நாகப்பட்டினம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் அண்ணன் அ.அம்பலவாணன் வருகிறார். அன்றைக்கு, தமிழோடு நடந்து வந்த உணர்வு ஏற்பட்டது.

**–மு.க.ஜீவா, தலைவர், பகுத்தறிவாளர் கழகம், நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வழியெங்கும் கருப்புக்கொடி!

1950-ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் தேதி, சென்னை இந்தி பிரச்சார சபாவின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அன்றைய ஒன்றிய அமைச்சர் திவாகர் வரும்போது, கருப்புக் கொடி காட்டுவது என தலைமைக் கழகம் அறிவித்தது. 03.09.1950 அன்று திவாகர் நிகழ்ச்சியை விளக்கி, ‘திராவிட நாடு’ தனிமலர் வெளியிட்டது. சென்னையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்துக்கு அடுத்த நாள், காஞ்சிபுரம் சென்றபோதும் வழியெங்கும் கருப்புக் கொடி காட்டினர் கழகத்தினர். காஞ்சிபுரத்தில் அமைச்சர் காரிலிருந்து இறங்காமலேயே சென்னைக்குப் புறப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131